சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவ பேச்சைக் கண்டித்து ஒருங்கிணைந்த

# கடலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவ பேச்சைக் கண்டித்து ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் வருகின்ற (12.09.2026 – சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில், கடலூர், மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ, தலைமையிலும், கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.வெ.கணேசன் எம்.எல்.ஏ, ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட தி.மு.க. கடலூர் கிழக்கு மற்றும் கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வட்டம், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநரக, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில்

# ஆவடி மேற்கு பகுதி, ஆவடி வடக்கு பகுதி, பூவிருந்தவல்லி நகரம் மற்றும் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் ஆகிய நிர்வாகம் வாரியாக மறுசீரமைப்பு கலந்தாய்வுக் கூட்டம்!

## மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!



கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தலைமை கழக பிரதிநிதிகள் மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா Ex MLA, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக் முன்னிலையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட ஆவடி மேற்கு பகுதி ஆவடி வடக்கு பகுதி பூவிருந்தவல்லி நகரம் மற்றும் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் ஆகிய நிர்வாகங்களில் மறுசீரமைப்பு கலந்தாய்வுக் கூட்டம் பின்வரும் அட்டவணைப்படி நடைபெறும்.

**நாள் : இன்று (10-09-2026 வியாழன் கிழமை)**

| நேரம் | நிர்வாகம் | செயலாளர்கள் | இடம் |
|---|---|---|---|
| காலை 9 மணி | ஆவடி மேற்கு பகுதி | பொன்.விஜயன் | பகுதி கழக அலுவலகம் பட்டாபிராம் |
| காலை 11 மணி | ஆவடி வடக்கு பகுதி | ஜி.நாராயண பிரசாத் | SPS மஹால் இந்து கல்லூரி அருகில் |
| மாலை 4 மணி | பூவிருந்தவல்லி நகரம் | ஜி.ஆர்.திருமலை | நகர கழக அலுவலகம் |
| மாலை 6 மணி | பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் | டி.தேசிங்கு | ஸ்ரீ லலிதா மஹால் கொசவன் பாளையம் |

மேற்கண்ட அட்டவணைப்படி நடைபெறும் மறுசீரமைப்பு கலந்தாய்வுக் கூட்டங்களில் அந்தந்த நிர்வாகங்களுக்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக, கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தொண்டர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு தங்களின் ஆலோசனைகளை வழங்கிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

---

சென்னை வடக்கு மாவட்டம்

# பெரம்பூர், இராயபுரம் மற்றும் ஆர்.கே.நகர் ஆகிய தொகுதிகளின் வட்டம் - பகுதி வரையறை தொடர்பான தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டங்கள்!

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அறிவிப்பு!



ஆகஸ்ட் 22, சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற கழக செயற்குழு கூட்டத்தின் முடிவின்படி சென்னை வடக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் 06.09.2026 ஞாயிற்றுக்கிழமையன்று தலைமைக் கழக பிரதிநிதிகள் பேரா.ஜெ. கான்ஸ்டண்டைன் ரவீந்திரன் எம்.பி., மற்றும் எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலின்படி கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக வட்டம் - பகுதி வரையறை தொடர்பான தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெறும் விவரம்.

| நாள் / நேரம் | தொகுதி | இடம் | முன்னிலை |
|---|---|---|---|
| 11-09-2026 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி | ஆர்.கே.நகர் | மரியம் திருமணமண்டபம் கொருக்குப்பேட்டை | S.ஜெபதாஸ் பாண்டியன் மேற்கு பகுதி செயலாளர்<br>இரா.இலட்சுமணன் கிழக்குபகுதி செயலாளர் |
| 11-09-2026 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி | பெரம்பூர் | தமிழ் பேலஸ் E.H.ரோடு | க.ஜெயராமன் தெற்கு பகுதி செயலாளர்<br>அ.முருகன் வடக்கு பகுதி செயலாளர் |
| 12-09-2026 சனிக்கிழமை மாலை 4.00 மணி | இராயபுரம் | அறிவகம் இராயபுரம் | வ.பெ.சுரேஷ் மேற்கு பகுதி செயலாளர்<br>இரா. செந்தில் குமார் கிழக்கு பகுதி செயலாளர் |

மேற்கண்ட கலந்தாய்வுக் கூட்டங்களில், நாடாளுமன்ற உறுப்பினர்,அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக்கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள்ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: பகுதி, வட்டம் மறுசீரமைப்பு குறித்து

**ஆர்.டி.சேகர்**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

---

கண்ணியமான அணுகுமுறை இல்லை!

# முதல்வரின் 'உடல்மொழி' நாகரிகமற்றது!

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. கடும் கண்டனம்!



**சென்னை, செப். 10-**

**மிசா கைது சம்பவத்தில் மு.க.ஸ்டாலின் குறித்து சட்டப்பேரவையில் பேசிய முதலமைச்சர் விஜய், கைகளை தாடைக்கு அருகே கொண்டு சென்று காட்டிய சைகை பெரிதும் சர்ச்சையாகியுள்ளது. இதற்கு இடதுசாரி தோழர்கள் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், தற்போது வி.சி.க. தலைவர் திருமாவளவனும் கண்டனத்தை பதிவிட்டிருக்கிறார்.**

வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:–

காவல்துறை மானியத்தில் முதல்வர் அவர்கள் ஆற்றிய பதிலுரையின்போது, தி.மு.க. தலைவரும் மேனாள் முதல்வருமான தளபதி ஸ்டாலின் அவர்களைக் கேலி செய்யும் வகையில் அவரது உடல்மொழி அமைந்திருந்ததாக கடும் விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், முதல்வர் தரப்பில் 'அது உள்நோக்கம் கொண்டதல்ல' என்று விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது.

எனினும், இதுபோன்ற 'உடல்மொழிகள்' கண்ணியமான அணுகுமுறை இல்லை என்பதையும் மனித மாண்புகளுக்கு எதிரானது என்பதையும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சுட்டிக்காட்டுகிறோம். எந்தவொரு சூழலிலும் ஒருவரின் 'தன்மதிப்பைக்' குறைத்து மதிப்பிடுவதோ, காயப்படுத்துவதோ நாகரிகம் ஆகாது.

தனிநபர் ஒருவரின் மீதான அரசியல் விமர்சனங்கள் என்பது வேறு; தனிப்பட்ட முறையில் ஒருவரின் தன்மதிப்பைக் காயப்படுத்தும் விமர்சனங்கள் என்பது வேறு. கல்வி, பொருளாதாரம், அதிகாரம் போன்ற வலிமையில்லாத எளிய மனிதரையும்கூட காயப்படுத்தும் அணுகுமுறை ஒருபோதும் ஏற்புடையதில்லை.

அகவையில் மூத்தோரை மதிப்பது மனித மாண்புகளில் மிகவும் உயர்ந்ததாகும். எனவே, மாண்பு நிறைந்த ஒரு மகத்தான பொறுப்பிலுள்ள முதலமைச்சர் இனிவரும் காலத்தில் தனது உடல்மொழியில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நலம் பயப்பதாகும். முதல்வரின் பதிலுரையையொட்டி அடுத்தநாள் தி.மு.க. தரப்பில் முதல்வரின் உரையில் சில பகுதிகளை அவை குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டது.

**அமைச்சரின் கருத்து வரலாற்றுப் பிழையாகும்!**

அந்த விவாதத்தின் போது இடைமறித்து சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கூறிய கருத்து வரலாற்றுப் பிழையாகும். மிசா காலத்து அரசப்பயங்கரவாதம் எத்தகையது என்பது நாடறிந்த ஒன்றாகும். அந்தக் கொடிய ஒடுக்குமுறைக்குள்ளான தி.மு.க. தலைவர் குறித்து முற்றிலும் தவறான கருத்தினைப் பதிவு செய்தது கண்டனத்துக்குரியதாகும். அமைச்சர் அதனை திரும்பப் பெறுவதாக அறிவிக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு தொல்.திருமாவளவன் எம்.பி. தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# எடப்பாடி - மேட்டூர் - சங்ககிரி சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக மறு சீரமைப்பு குறித்த ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயற்குழுக் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தலைமைக் கழக பிரதிநிதிகள் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு செயலாளர், வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி. மற்றும் கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் அழகிரி சதாசிவம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி சேலம் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், வார்டு மற்றும் கிளை கழக செயற்குழுக் கூட்டம் சேலம் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி., தலைமையில் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெற உள்ளது.

### 86 – எடப்பாடி சட்டமன்றத் தொகுதி

தேதி : 10.09.2026 - வியாழக்கிழமை

| வ. எண் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த கொங்கணாபுரம் ஒன்றியம், கொங்கணாபுரம் பேரூர் | காலை 9.00 | என்.பி.டி.மஹால், கொங்கணாபுரம் |
| 2 | எடப்பாடி நகரம் | காலை 10.00 | நகர செயலாளர் பாஷா இல்லம் |
| 3 | ஒருங்கிணைந்த எடப்பாடி ஒன்றியம், பூலாம்பட்டி பேரூர் | மதியம் 2.00 | எம்.ஏ.ஏ.திருமண மண்டபம், வேம்பனேரி |
| 4 | ஒருங்கிணைந்த நங்கவள்ளி ஒன்றியம், நங்கவள்ளி பேரூர், வனவாசி பேரூர், ஜலகண்டாபுரம் பேரூர், பி.என்.பட்டி பேரூர், வீரக்கல்புதூர் பேரூர் | மாலை 4.00 | எஸ்.ஆர்.கே.மஹால், சக்தி கைலாஷ் கல்லூரி அருகில், நங்கவள்ளி. |

### 85 –மேட்டூர் சட்டமன்றத் தொகுதி

தேதி : 11.09.2026 - வெள்ளிக்கிழமை

| வ. எண் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | கொளத்தூர் ஒன்றியம், கொளத்தூர் பேரூர் | காலை 9.00 | லட்சுமி திருமண மண்டபம் கொளத்தூர் |
| 2 | மேட்டூர் நகரம் | காலை 11.00 | கற்பகம் திருமண மண்டபம், மேட்டூர் அணை – 1 |
| 3 | ஒருங்கிணைந்த மேச்சேரி ஒன்றியம், மேச்சேரி பேரூர் | மதியம் 3.00 | வி.எஸ்.எஸ்.ஆர் திருமண மண்டபம், பென்னாகரம் ரோடு, மேச்சேரி |

### 87 – சங்ககிரி சட்டமன்றத் தொகுதி

தேதி : 11.09.2026 - வெள்ளிக்கிழமை

| வ. எண் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த மகுடஞ்சாவடி ஒன்றியம் | மாலை 4.00 | ஹாட்டல் சரவணபவன், வைகுந்தம் |
| 2 | ஒருங்கிணைந்த சங்ககிரி ஒன்றியம், சங்ககிரி நகரம், தேவூர் பேரூர், அரசிராமணி பேரூர் | மாலை 5.00 | பார்வதிபாய் திருமண மண்டபம், திருச்செங்கோடு மெயின்ரோடு, சங்ககிரி. |

### 87 – சங்ககிரி சட்டமன்றத் தொகுதி

தேதி : 12.09.2026 - சனிக்கிழமை

| வ. எண் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | இடங்கணசாலை நகரம் | மதியம் 2.00 | நகர கழக அலுவலகம், இடங்கணசாலை |
| 2 | தாரமங்கலம் மேற்கு ஒன்றியம் | மதியம் 3.00 | சமுதாயக்கூடம், பாப்பம்பாடி |
| 3 | தாரமங்கலம் நகரம் | மாலை 4.00 | சின்னதகம் மண்டபம், முத்துமுனியப்பன் கோவில் அருகில், தாரமங்கலம் |

மேற்கண்ட அட்டவணைப்படி நடைபெறும் கழக மறு சீரமைப்பு குறித்து ஒன்றிய, நகர, பேரூர் கழக செயற்குழுக் கூட்டங்களில் அந்தந்த நிர்வாகங்களுக்குட்பட்ட மாவட்ட, தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு கழக, கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு தங்களின் ஆலோசனைகளை வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர்